**<u>சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்.</u>**

**<u>வாராந்த பாடசாலை</u>**

**பாடம்: பரதநாட்டியம்.** **வாரம்:4**

**தரம்: 8** **Prepared by: Embilipitiya education zone**

**<u>பகுதி1</u>**

**<u>பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.</u>**

**1.பிரம்மா இசையை பிரமாணப்படுத்திய வேதம்,**

1.இருக்கு 2.யசுர் 3.சாமம் 4.அதர்வனம்

**2.அபாத்திர லட்சணங்களுள் ஒன்று,**

1.சிவந்த மேனி 2.அடக்கம் 3.பொறுமை 4.மாலைக்கண்

**3.மிஸ்ர ஜாதிக்குரிய சொற்கட்டு,**

1.தகதகிட 2.தகிடதகதிமி 3.தகிட 4.தகதிமி

**4.தளாங்கு தொம் – என்ற செயற்பாட்டைக் குறிக்கும் பாத பேதம்,**

1.மண்டலம் 2.உத்பிளவனம் 3.பிரம்மரி 4.பாதசாரிகா

**5.ஜாதி பேதங்களினால் மாற்றமடையும் அங்கம்,**

1.லகு 2.த்ருதம் 3.அனுத்ருதம் 4.மேற்கூறிய யாவும் பிழை

**6.தரங்ககே என்பது,**

1.நிலம் 2.நீர் 3.அலைகள் 4.துன்பம்

**7.மாரியம்மனைப் பிரார்த்தனை செய்து ஆடும் நடனம்,**

1.கும்மி 2.கரகம் 3.காவடி 4.கோலாட்டம்

**8.ஆடை,ஆபரணம் இடம்பெறும் அபிநயம்,**

1.சாத்விகம் 2.ஆங்கிகம் 3.வாச்சிகம் 4.ஆஹார்யம்

**9.சிரோபேதங்களின் எண்ணிக்கை,**

1. 8 2. 6 3. 9 4. 10

**10. அலபத்மம் என்பதன் பொருள்,**

1.மலர்ந்த தாமரை 2.மொட்டு 3.விளாம்பழம் 4.சந்திரன்

## பகுதி 2

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1.கீழ்வருவனவற்றின் இசைகுறியீடுகளைத் தருக.

| | |
|---|---|
| ஆவர்த்தன முடிவு | |
| விளம்பிதகாலம் | |
| அந்நியஸ்வரம் | |
| அனுத்ருதம் | |
| ரூபகதாளம் | |
| லகு | |
| த்ருதம் | |
| ஆதிதாளம் | |

2.**முஷ்டி,சிகரம்** என்பவற்றின் விநியோகங்களைத் தருக.

3.திருஷ்டிபேதத்தினைத் தருக.

4.உமக்குத் தெரிந்த கதைப்பாடல் ஒன்றைத் தருக.

5.நாட்டியத்தின் புராண வரலாற்றைத் தருக.

6.ஆதி,ரூபக தாளம் பற்றி விளக்குக.[அட்சரம்,குறியீடு,அங்கம்,செய்முறை]

7.நாட்டியகிரமத்தினைத் தருக.

8.**பரதம்** என்ற பெயர் வரக்காரணம் பற்றி ஆராய்க.

9.இசைக்கருவிகளின் வகைகளைக் குறிப்பிட்டு அதற்கு உதாரணம் தருக.

10.**பரதநாட்டியம்** பற்றி சிறுகுறிப்பு தருக.